**பெருநகர சென்னை மாநகராட்சி**

**செய்தி வெளியீடு**

**செ.வெ.எண். 110** **நாள்: 20.02.2026**

**மாண்புமிகு நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற "மக்கள் முதல்வரின் மனிதநேய விழா"-வினை முன்னிட்டு, 1800 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.**

இன்று (20.02.2026) மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு அவர்கள், மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள் திரு.வி.க. நகர் சட்டமன்ற தொகுதி, புளியந்தோப்பு, டிக்காஸ்டர் சாலை, டான் பாஸ்கோ பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் நடைபெற்ற "மக்கள் முதல்வரின் மனிதநேய விழா"- வினை முன்னிட்டு, 1800 தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினர்.

**இக்கூட்டத்தில் மாண்புமிகு நகராட்சி நிருவாகத் துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் தூய்மைப் பணியாளர்களின் நலனிற்காக பல்வேறு நலத்திட்டங்களை சிறப்புடன் செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு பிறந்தநாள் உள்ளிட்ட பல்வேறு விழாக்கள் நடைபெற்ற போதிலும், தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கின்ற விழா தான் முதல்வர் அவர்களுக்கான சிறப்பான விழாவாகும். உங்களோடு நாங்கள் இருக்கிறோம் என்பதை உறுதி செய்வதற்காக தான் நாங்கள் இங்கு பங்கேற்றிருக்கிறோம். வேலை நிறுத்தம் நடைபெற்ற போது மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர், மேயர் உள்ளிட்ட அனைவரும் மிக கவனமாக இருந்து வழக்கறிஞர் பாரதி அவர்களோடு தொடர்ந்து பேசி ஒரு சுமுக உடன்பாடு ஏற்பட்டது.

இதற்காக மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தார்கள். இதற்காக பாடுபட்ட மாண்புமிகு இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் உள்ளிட்ட அனைவரையும் பாராட்டுகிறேன். தூய்மைப்

பணியாளர்களின் பணியானது மிக அத்தியாவசியமான பணியாகும். நீங்கள் சிறப்பாக
பணியாற்றும் போது தான் மக்கள் நோய்கள் பாதிப்பின்றி நலமாக வாழமுடியும். ஆகவே, தூய்மைப் பணியாளர்கள் அனைவரையும் பாராட்டி வாழ்த்துகிறேன் என்று பேசினார்.

**இவ்விழாவில் மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் அவர்கள் பேசியதாவது:**

தூய்மைப் பணியாளர்கள் நலனைப் பாதுகாக்கின்ற வகையில், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள், சிறப்பான திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசால் தூய்மைப் பணியாளர்களின் போராட்டமானது சுமுகமாக முடிவுக்கு கொண்டுவரப்பட்டது. தற்போது, போராட்ட காலத்தில் ஈடுபட்ட 1400 பேர் மீண்டும் பணியில் சேர்க்கப்பட்டதோடு மட்டுமல்லாமல் புதிதாக 400 பேரும் பணியில் சேருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு அவர்களுக்கும் சேர்த்து 1800 தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் தற்போது வழங்கப்படுகிறது. தொடர்ந்தும் தூய்மைப் பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கப்படும். தூய்மைப் பணியாளர்களுக்கு திராவிட மாடல் அரசு என்றும் உறுதுணையாக இருக்கும். தூய்மைப் பணியாளர்களின் நலனைக் காக்கின்ற மாண்புமிகு தமிழ்நாடு முதல்வர் அவர்களுக்கு மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறோம். போராட்டத்தை சுமுக முடிவுக்கு கொண்டு வருவதற்கு உதவிய வழக்கறிஞர் பாரதி அவர்களுக்கு நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடசென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, திரு.வி.க.நகர் சட்டமன்ற உறுப்பினர் திரு.தாயகம் கவி, துணை மேயர் திரு.மு.மகேஷ்குமார், உழைப்போர் உரிமை இயக்கத் தலைவர் வழக்கறிஞர் திரு.கே.பாரதி, மண்டலக்குழுத் தலைவர் திருமதி சரிதா மகேஷ்குமார், உள்ளாட்சி பிரதிநிதிகள் திரு.செ.தமிழ்வேந்தன், திரு.ராஜன், திரு.எம்.சாமிக்கண்ணு, திரு.தமிழன்பிரசனா, திரு.மு.சரவணன், திரு.எம்.இசட்.அபோய் மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு: இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**